அ.வ எண் 20/2012 ஐயப்பன் (பிசா1) தேதி:19.12.2022

14 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கு எனது சகோதரிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் அவர்கள் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 3 அயிட்டம் சொத்துக்களில் பாகபிரிவினை கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.வாதிகளுக்கு தாவா சொத்தில் பிராதில் கேட்ட படி பங்கு கிடையாது என்று நான் வழக்காடுகிறேன் என்றால் சரிதான். பிராது 3 வது தபசில் சொத்தை பொறுத்து எனது தாத்தா ஐயப்ப நாயக்கர் 14.05.1960 தேதியிட்ட உயில் ஆவணத்தின் அசலை நான் பார்க்கவில்லை. மேற்படி அசல் உயில் ஆவணம் தற்பொழுது யார் கைவசம் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்ட உயில் ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. ஐயப்ப நாயக்கரின் இறப்பு சான்றிதழ் நான் தாக்கல் செய்துள்ளேன். ஐயப்ப நாயக்கருக்கு 3 ஆண் மற்றும் 3 பெண் குழந்தைகள் உண்டு.மேற்படி ஐயப்ப நாயக்கரின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை ஐயப்ப நாயக்கரின் 3 பெண் வாரிசுகளின் அனுபவத்தில் இருப்பதை காட்டும் ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். சாட்சி மீண்டும் சொல்கிறார் அதற்கான ஆவணம் எவையும் இல்லை. மேற்படி 3 பெண்வாரிசுகளும் சொத்துக்களை பாகம் செய்துகொண்டார்களா என்றால் பாகம் செய்யவில்லை. 3 பெண்வாரிசுகளும் தற்பொழுது உயிரோடு இல்லை. 3 பெண் வாரிசுகளின் இறப்பு சான்றிதழ்கள் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்வில்லை. சாட்சி மீண்டும் சொல்கிறார் 3 வாரிசுகளின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். ஆனால் வாரிசு சான்றிதழ்கள் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.ச.3 ஆவணம் 2 வது தபசில் சொத்தை பொறுத்த ஆவணம் என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்லமுடியும். மேற்படி ஆவணம் 2 வது தபசில் சொத்தை பொறுத்த ஆவணம் என்று நான் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாயாபகம் இல்லை. இந்த வழக்கில் வாதிகள் எனது அம்மாவிற்கு 2009 வருடம் முதல் புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்து வந்தது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அது உண்மை கிடையாது. வாதிகள் வழக்கில் எனது அம்மா புத்திசுவாதீனம் இல்லாமல் இருந்து தாவா சொத்துக்கள் சம்பந்தமாக எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டதாக வழக்கில் சொல்லியுள்ளார்கள்

என்றால் சரிதான். ஆனால் அது தவறு ஆகும். 3 வது தபசில் சொத்தில் மொத்தம் 6 அயிட்டம் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. மொத்தம் 8 ஏக்கர் 95 செண்ட் 3 வது தபசில் சொத்தில் காட்டப்பட்டுள்ளது. 3 வது தபசில் சொத்து எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3 வது தபசில் 5 மற்றும் 6 அயிட்டம் சொத்துக்கள் ஆதியில் காமாட்சி செட்டியார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி காமாட்சி செட்டியாரிடமிருந்து சுப்பாநாயக்கர் என்பவர் வாய்மொழியாக கிரையம் பெற்று அனுபவம் பெற்றுவந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சுபாநாயக்கர் இறந்தபிறகு அவரது வாரிசான 13 ம் பிரதிவாதி மேற்படி சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 13 ம் பிரதிவாதி 3 ம் தபசில் 5,6 அயிட்டம் சொத்துக்களுக்கு பட்டா எண்.61 ல் பட்டா பெற்று அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. 23.12.2010 ம் தேதி மேற்படி சொத்துக்களை 14 ம் பிரதிவாதி மேற்படி 13 ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 3 ம் தபசில் 5,6 அயிட்டம் சொத்துக்கள் இன்றைய தேதி வரை 14 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருக்கிறது என்றால் சரியல்ல. எனவே, 3 ம் தபசில் 5,6 அயிட்டம் சொத்துக்களில் எந்த பாகமும் கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்து குறித்து எங்கள் பெயரில் ஆவணங்கள் கிடையாது என்றால் எனது அம்மா பெயரில் பட்டா உள்ளது. மேற்படி சொத்து சம்பந்தமாக தீர்வை இரசீது நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே, நாங்கள் கோரிய பாகபிரிவினை கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.